ராமேஸ்வரம் குண்டு மல்லி ஆண்டுக்கு ரூபாய் ஒரு லட்சம் லாபம்

First Published : 13 Jan 2011 12:35:00 AM IST



காஞ்சிபுரம் அருகே உள்ள விச்சந்தாங்கல் தோட்டக் கலைத்துறை விவசாய பண்ணையில் பயிர் செய்யப்பட்டுள்ள ராமேஸ்வரம் குண்டு மல்லி.

காஞ்சிபுரம்: ஓர் ஆண்டில் 9 மாதங்களுக்கு பூக்களை தரும் ராமேஸ்வரம் குண்டு மல்லியை பயிர் செய்வதன் மூலம் ஹெக்டேர் ஒன்றுக்கு ஆண்டுக்கு ரூ.1 லட்சம் வரை விவசாயிகள் லாபம் சம்பாதிக்க முடியும்.

÷இந்த வகை மல்லிகை பூச்செடியை விவசாயிகள் முதலில் பயிர் செய்ய ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.25 ஆயிரம் வரை செலவாகும். ஆனால் தொடர்ந்து உரங்களை வைத்தால் போதும். 10 ஆண்டுகள் வரை பூக்கள் கொடுத்து பலன் தரும். முறையாக தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

÷இந்த ராமேஸ்வரம் மல்லியை பொறுத்தவரை பயிர் செய்த 6-வது மாதத்தில் இருந்து பூக்களை கொடுக்கும். ஓர் ஆண்டுக்கு 9 மாதங்கள் பூக்களைக் கொடுக்கும். ஒன்று விட்டு ஒரு நாள் பூக்களை பறிக்கலாம். முறையாக உரங்களை வைத்தால் ஒரு நாளைக்கு 50 கிலோ முதல் 100 கிலோ வரை பூக்கள் கிடைக்கும்.

÷இந்தப் பூக்களின் விலை நிலையாக இருக்காது. கிலோ ரூ.50-ல் இருந்து ரூ.200 வரை கூட விற்கும். திருமணம், திருவிழாக்காலங்களில் விலை அதிகம் இருக்கும். சராசரியாக ஒரு நாள் விட்டு ஒரு நாளுக்கு ரூ.2,500 கிடைக்கும். பறிப்பதற்கான ஆள் கூலி, உரச் செலவுகள் என்று அனைத்து செலவுகளையும் கழித்தாலும் ஓர் ஆண்டில் ரூ.1 லட்சம் வரை லாபம் பெற முடியும் என்று விவசாய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

எங்கு கிடைக்கும்? இந்த வகை மல்லி செடிகள் பல்வேறு தனியார் பண்ணைகளிலும், அரசின் தோட்டக் கலைத் துறை பண்ணைகளிலும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. செடிகள் வாங்கும்போது விவசாயிகள் தரமான செடிகளை வாங்கி நட வேண்டும். பூக்கள் பூக்க

ஆரம்பித்துவிட்டால் தொடர்ந்து உரங்களை வைத்து 10 ஆண்டுகள் பூக்களைப் பறிக்க முடியும். நாம் செடி வைக்கும் மாதத்தை பொறுத்து ஓர் ஆண்டில் 9 மாதங்கள் பூக்களை எடுக்கலாம். ஏதேனும் மூன்று மாதங்கள் விளைச்சல் இருக்காது.

மானியம் உண்டு: இந்த பூ விளைச்சல் குறித்து தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் கோமதியிடம் கேட்டபோது அவர் கூறியது:

÷ராமேஸ்வரம் குண்டு மல்லி நல்ல லாபம் தரக்கூடியது. குறைந்த பட்சம் ஆண்டுக்கு ரூ.1 லட்சம் லாபம் கிடைக்கும். இந்த வகை மல்லிகள் 9 மாதங்கள் பூத்து விவசாயிகளுக்கு பலன் கொடுக்கும். இந்த வகை தரமான செடிகள் தோட்டக் கலைத்துறை பண்ணைகளில் செடி ஒன்று ரூ.5-க்கு விற்கப்படுகின்றன. ஒரு ஹெக்டேருக்கு 6 ஆயிரம் கன்றுகள் தேவைப்படும். இந்த வகை மல்லியை பயிர் செய்ய குறிப்பிட்ட அளவு விவசாயிகளுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.7500 மானியம் தருகிறோம். இதை பணமாக தரமாட்டோம். ஒரு ஹெக்டேருக்கு தேவையான ரூ.7500 மதிப்புள்ள 1500 மல்லிச் செடிகளை கொடுத்துவிடுவோம். விவசாயிகள் தனியாகவும் வாங்கி பயிர் செய்யலாம் என்றார்.

**இலவச மரக்கன்று வழங்கும் வனவியல் மையம்**

First Published : 13 Jan 2011 12:40:00 AM IST



பூண்டியில் உள்ள வனவியல் விரிவாக்க மையத்தில் வளர்க்கப்பட்டு வரும் பல்வேறு மரக்கன்றுகள்.

திருவள்ளூர்: சொந்த நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு இலவசமாக மரக்கன்றுகள், அதை வைத்து பராமரிக்க முறையான பயிற்சி மற்றும் கன்றுக்கு ஊக்கத்தொகை என பல வகைகளில் விவசாயிகளின் வாழ்க்கையை வனவியல் விரிவாக்க மையம் வளமாக்கி வருகிறது.

÷தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் அரசு சார்பில் வனவியல் விரிவாக்க மையம் இயங்கி வருகிறது. திருவள்ளூர்- ஊத்துக்கோட்டை சாலையில் பூண்டியில் திருவள்ளூர் மாவட்ட வனவியல் விரிவாக்க மையம் 3.10 ஹெக்டேர் பரப்பளவில் இயங்கி வருகிறது. இங்கு தேக்கு, சவுக்கு, குமிழ், மகானி, வேங்கை, செம்மரம், மூங்கில், சவுக்கு உள்ளிட்ட மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு விவசாயிகளுக்கு இலவசமாக வழங்குகிறது.

÷குறைந்தபட்சம் ஒரு ஏக்கர் நிலம் சொந்தமாக வைத்துள்ள விவசாயிகள் நிலத்துக்கு உரிய ஆவணங்களும், ரேஷன்கார்டு ஆகியவற்றுடன் வனவிரிவாக்க மையத்தை அணுகினால் வனவிரிவாக்க மைய அலுவலர்கள் விவசாயிகளின் இடத்துக்கே நேரில் சென்று ஆய்வு செய்து அந்த மண்ணின் வளத்துக்கேற்றவாறு மரக்கன்றுகளை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்குவர். ஒரு ஏக்கருக்கு 2000 கன்றுகள் வரை வழங்கி அதை முறையாக பராமரிக்கும் பயிற்சி, மண் புழு உரம் மற்றும் தேவையான வழிமுறைகளையும் விவசாயிகளுக்கு எடுத்து கூறி வளம் பெறச் செய்கின்றனர்.

**ஊக்கத்தொகை:** தங்களது வயலில் பயிரிட்டிருந்தாலும் அதன் வரப்பு ஓரங்களில் மரக்கன்றுகளை வரிசையாக நட்டு அதன் மூலம் விவசாயிகள் கூடுதல் வளம் பெற வழிகாட்டுகின்றனர். நாளடைவில் வனவியல் விரிவாக்க மைய அலுவலர்களின் வழிகாட்டுதலை முறையாக பின்பற்றி மரக்கன்றுகளை முறையாக பராமரிக்கும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகையாக ஒரு கன்றுக்கு ரூ.5 வழங்குகின்றனர்.

÷தேக்கு 20 ஆண்டுகள், மகானி 20 ஆண்டுகள், வேங்கை 20 ஆண்டுகள், குமிழ் 7 ஆண்டுகள், மூங்கில் 3 ஆண்டுகள், சவுக்கு 4 ஆண்டுகள் என பருவத்துக்கு ஏற்றவாறு மரங்கள் விவசாயிகளுக்கு பெருத்த லாபத்தை ஏற்படுத்தி தருகின்றன.

**மரக்கன்று விநியோகம்:** இது குறித்து பூண்டியில் உள்ள வனவியல் விரிவாக்க மைய அலுவலர் சிவலிங்கம் கூறும்போது, "3.10 ஏக்கரில் இங்கு தேக்கு, வேங்கை, குமிழ், மகானி உள்ளிட்ட பல்வேறு மரக்கன்றுகளை வளர்த்து அதை உரிய பருவத்தில், நாடி வரும் விவசாயிகளுக்கு வழங்கி வருகிறோம். கடந்த 2009-ம் ஆண்டு இம்மாவட்டத்தில் 60 ஆயிரம் மரக்கன்றுகளை விவசாயிகளுக்கு வழங்கியுள்ளோம்.

÷வனவியல் விரிவாக்க மையம் குறித்த விழிப்புணர்வு விவசாயிகளுக்கு முழு அளவில் ஏற்படாததால் தற்போது கிராமப்புறங்களில் சென்று பயிற்சி கூட்டங்கள் நடத்தி விழிப்புணர்வு ஏற்படுத்துகிறோம். 2011-ம் ஆண்டில் 2 லட்சம் மரக்கன்றுகளை இம்மாவட்ட விவசாயிகளுக்கு வழங்க இலக்கு நிர்ணயித்து அதற்காக முயற்சி மேற்கொண்டு வருகிறோம்' என்றார். விவசாயிகள்

மேலும் விவரங்களுக்கு 9994347739 என்ற எண்ணில் வன விரிவாக்க மைய அலுவலர் சிவலிங்கத்தை தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

**ஆரோக்கியமான மிளகாய் நாற்றுகளை வளர்ப்பது எப்படி?**

எஸ்.சபேஷ்

First Published : 13 Jan 2011 01:09:05 PM IST

அரக்கோணம்: வீரிய ஒட்டு ரக மிளகாயை பயிரிட்டாலும் ஆரோக்கியமான நாற்றுகளை உற்பத்தி செய்து நடவு செய்வதன் மூலமே நல்ல மகசூல் பெற முடியும் எனவும், அதை செயல்படுத்தும் முறை குறித்தும் வேளாண் துறையினர் யோசனை கூறியுள்ளனர்.

மேட்டுப்பாத்தி நாற்றங்கால்: பாத்திகளை ஓரளவு நிழல்படியும் படியான இடத்தில் 10-15 செ.மீ. உயரத்தில் தயாரிக்க வேண்டும். அதன் அகலம் 1 மீட்டர், நீளம் 3 மீட்டர் வரை அமைக்கலாம். மண் மிருதுவாகவும், ஈரம் காக்கும் தன்மையுடையதாகவும் இருக்க வேண்டும். இதற்காக மண்ணின் தன்மையைப் பொறுத்து குறுமண், மணல் ஆகியவற்றை கலக்க வேண்டும்.

நன்கு பண்படுத்திய ஒரு சென்ட் நாற்றங்காலுக்கு 20 கிலோ மக்கிய தொழு உரம் அல்லது கம்போஸ்ட சேர்க்க வேண்டும். ஒரு சென்ட நாற்றங்காலுக்கு இரண்டு கிலோ டி.ஏ.பி. உரம் இடுவதால் நாற்றுகள் ஊட்டத்துடன் வளர்கின்றன. மேலும் நாற்றுகளை பிடுங்கும் போது வேர் அறுபடாமல் இருக்கும்.

நாற்றங்காலில் நூற்புழு, இளம்பயிரில் சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுபடுத்த ஒரு சென்ட் நாற்றங்காலுக்கு 250 கிராம் வீதம் பீயுரடான் குருணைகளை இட வேண்டும். அழுகல் நோய் வராமல் தடுக்க ஒரு சதவீதம் வீரியமுள்ள போர்டா கலவையால் மண்ணை நேர்த்தி செய்ய வேண்டும்.

மேட்டுப்பாத்தியின் மேற்பரப்பை மரப்பலகையால் சமப்படுத்த வேண்டும். அதில் 10 செ.மீ. இடைவெளியில் 1.2 செ.மீ. ஆழத்துக்கு கோடுகள் போட்டு, அந்தக் கோடுகளில் விதை நேர்த்தி செய்த விதைகளை, பரவலாக, சீரான இடைவெளியில் விதைக்க வேண்டும். அடர்த்தியாக விதைப்பது அழுகல் நோயை உண்டாக்கும். மேலும் நாற்றுகள் மெலிந்து காணப்படும். விதைக்கும் ஆழம் விதைகளின் விட்டத்தை விட 3-4 மடங்கு அதிகம் இருக்க வேண்டும்.

விதைகளை மணல் அல்லது நாற்றங்கால் மண் கொண்டு மூடிவிட்டு பூவாளியால் நீர் பாய்ச்ச வேண்டும். பின் வைக்கோல் அல்லது உலர்ந்த இலைகளை பாத்திகளின் மேல் பரப்ப வேண்டும்.

விதைத்து 10 முதல் 15 நாள்கள் கழித்து பாத்திகளின் மேல் பரப்பிய வைக்கோல் அல்லது இலைகளை அகற்றி விட வேண்டும். தினமும் பூவாளி கொண்டு காலை, மாலை நேரங்களில் நீர் ஊற்றுவது நாற்றுகள் நல்ல வளர்ச்சி அடைவதற்கும், விதைகள் நாற்றங்காலை விட்டு வெளியே வராமல் இருப்பதற்கும் உதவுகிறது.

நாற்றங்காலில் வேர் அழுகல் நோயை கட்டுபடுத்த பதினைந்து நாள்கள் இடைவெளியில் காப்பர் ஆக்ஸிகுளோரைடு அல்லது புளுகாப்பர் 2.5 கிராம் மருந்தை 1 லிட்டர் நீரில் கரைத்து ஊற்ற வேண்டும். நடவுக்காக நாற்று பிடுங்குவதற்கு 12 மணி நேரத்துக்கு முன்பே மேட்டுப்பாத்திகள் நன்கு மூழ்கும் அளவுக்கு நீர் பாய்ச்ச வேண்டும்.

குழித்தட்டு நாற்றங்கால்:

நாற்றுகள் நல்ல வாளிப்பாகவும் முழுமையான வேர்களுடனும் கிடைக்க "புரோடிரே' எனப்படும் குழித்தட்டு நாற்று அட்டைகள் உதவுகின்றன. இம்முறையில் நன்கு மக்கிய தென்னை நார்க்கழிவை வளர் ஊடகமாக பயன்படுத்தி பூச்சிகள் புகாத நிழல் வலைக் கூடாரங்களில் நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இம்முறையை பயன்படுத்தி பருவமற்ற காலங்களிலும் நாற்றுகளை உற்பத்தி செய்யமுடியும். குழித்தட்டுகளில் நாற்றுகள் உற்பத்தி செய்யும் போது வழக்கமான முறையை விட விதையளவு 30-40 சதவீதம் குறைவாக தேவைப்படும். பாதுகாப்பான சூழலில் நாற்றுகள் வளர்க்கப்படுவதால் பூச்சி, நோய்களின் தாக்குதல்களை கண்காணிப்பது எளிது.

மேலும் விவரங்களை பெற அவரவர் வட்டாரங்களில் உள்ள தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை அலுவலகத்தை அணுகலாம் என அரக்கோணம் வட்டார தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை உதவி இயக்குநர் ஜெபக்குமாரிஅனி தெரிவித்துள்ளார்.

**நீரில் வரைந்த நீர்க் கொள்கை**

ஆர்.எஸ். நாராயணன்

First Published : 13 Jan 2011 02:12:59 AM IST

ஐந்தாண்டுகளுக்கு முன்பே சூழலியல் நிபுணர்களும் வானவியல் விஞ்ஞானிகளும் பூமி உஷ்ணமாதலினால் அதாவது தொழில் வளர்ச்சி தோற்றுவித்த குளோரோ புளுரோகார்பன் - நச்சுப்புகையால் தட்பவெப்பம் ஒரே சீராக இராமல் தடுமாறும் என்றனர். திசைமாறித் தீவிரமழை பொழியும் என்றனர்.

இன்று ஆஸ்திரேலியாவில் ஏற்பட்ட வெள்ளம், பாகிஸ்தான் வெள்ளம், பரவலாக இந்திய வெள்ளம், மழையில் முழுகிய தில்லி, மும்பை, சென்னை நகரங்கள் எல்லாம் தடுமாறும் தட்பவெப்பத்தை எடுத்துக்காட்டுவதுடன் நிபுணர்களின் எச்சரிக்கைகள் எதுவுமே பொய்யல்ல என்றும் தெளிவுபடுத்துகிறது.

தமிழ்நாட்டை எடுத்துக்கொண்டால், தீபாவளிக்கு முன்பே தொடங்கிய மழை, பொங்கல் கடந்தும் விடுவதாகத் தோன்றவில்லை. வளிமண்டலத்தில் கருமேகம், என்று விலகும் என்று புரியவில்லை. போதிய சூரிய ஒளி இல்லாமல் பயிர்களுக்குப் பனிப்பற்றும் வேர் அழுகலும் ஏற்பட்டுள்ளன. கால்நடைகளுக்குப் பலவித நோய்கள். மனிதர்களைப் பற்றிக்கேட்கவே வேண்டாம். மூக்கடைப்பு, காய்ச்சல், வெள்ளப்பகுதிகளில் காலரா, வயிற்றுப்போக்கு, டைபாய்டு. மகிழ்ச்சியடையக்கூடியவர்கள் மருத்துவர்களே.

வடஇந்தியாவின் பெரும்பான்மை மாநிலங்களிலும் மழைகொட்டித் தீர்த்துவிட்டது. சராசரி அளவைவிட 10 முதல் 100 சதவீதம் அதிகம்.

உதாரணமாக, ஹரியாணா - 9 லட்சம் கியூசக் வெள்ளநீர் யமுனையில் வடிக்கப்பட்டு அபாய உயரத்தைத் தாண்டியதால் யமுனை நிறைந்து தில்லி மிதந்தது. யமுனை மட்டுமல்ல, சிந்து, கங்கை, பிரம்மபுத்ரா, கோசி, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி எல்லாமே அபாய அளவுக்கு மேல் ஆங்காங்கே கரை உடைந்து ஊரும் பயிரும் வெள்ளம். மழையே பெய்யாத ராஜஸ்தான், குஜராத்திலும் நர்மதை, தபதி பொங்கியது. ஊரை அழிக்கும் ஊழிவெள்ளம் இதுவரை கண்டிராத புதுமை.

இப்படி ஒரு பேய் மழையா? இதன் காரணம் என்ன? என்று யோசிப்பதைவிட இவ்வாறு வானம் வழங்கிய மழையை உகந்தவாறு நாம் ஏன் வரவேற்கத் தவறினோம் என்று யோசிப்பது நன்று. பேய் மழையே என்றாலும், பெரும் வெள்ளம் என்றாலும் அவை எல்லாமே வானம் வழங்கிய கொடைதான். நதிவெள்ளத்தை உகந்தவாறு தக்க வைத்துக்கொள்வதில் உள்ள இடர்கள் எவை?

நாம் கட்டியுள்ள அணைகளிலும், மாபெரும் ஏரி, நீர்த்தேக்கங்களிலும் தூர்படிந்து, கொள்ளும் அளவு குறைகிறது.

வனப்பகுதிகளிலும் நதிகளின் உற்பத்தி இடங்களிலும் மரங்கள் வெட்டப்படுவதாலும், மேய்ச்சல் நிலம் குறைவதாலும், புற்கள் இல்லாததாலும் மண்அரிப்பு ஏற்படுவதாலும் நதிகள் கொண்டுவரும் தூர் மண், நீர்த்தேக்கங்களின் கொள்ளளவைக் குறைக்கிறது.

சுற்றுச்சூழல் அமைச்சரக ஒப்புதல் அதாவது "கிளியரன்ஸ்' இல்லாமல் அரசுத்துறையும் தனியார் துறை - தனி நபர்கள் ஏரி, குளம், நதி வடிகால் பகுதிகளில் புதிய புதிய கட்டடங்கள் கட்டுவது.

ஒவ்வோர் ஊரிலும் ஏரி, குளங்கள் உள்ளன. கிராமப்பகுதிகளில் ஏரிகளை ஆக்கிரமித்துப் பயிர்கள் எழுப்பப்படுகின்றன. நகரப்பகுதிகளில் குளங்கள் குப்பைத்தொட்டிகளாகவும், ஏரிக்கரை ஏரிப்படுகைகளைப் புதிய நகர்களாகப் பெயர் சூட்டி ஒரு பிள்ளையார் கோயில், மசூதி, மாதா கோயில் கட்டி ஆக்கிரமிக்கப்படுகின்றன. நல்ல செயல்களுக்குத்தான் தெய்வம் துணை செய்யும் என்ற உண்மையை உணர வேண்டும்.

தேவைப்படும் இடங்களில் புதிய குளங்களை வெட்டியும், பழைய குளங்களில் உள்ள குப்பைகளை அகற்றியும் தூய்மைப்படுத்தும் பணி புறக்கணிக்கப்படுகிறது. வடிகால் கால்வாய்கள் தடைப்படாமல் அடுத்தடுத்த குளம் - ஏரிகளுக்குச் செல்ல வழிசெய்ய வேண்டும்.

மேற்கூறிய வழிகளில் மழையை வரவேற்க வேண்டும். இவ்வாறு வரவேற்றால் ஆழ்துளைக் கிணறுகளில் நீர்மட்டம் உயரும். வறண்ட பகுதிகள் வளமாகும். நதி, கால்வாய் உற்பத்தி இடங்களிலும் வனப்பகுதிகளிலும் பல்லுயிர்ப் பெருக்கம் வளம் பெறும். கடற்கரைச் சூழல் வளம் பெறும். நதிக்கரைகளில் சட்டத்துக்குப் புறம்பாகச் சுரங்கம் தோண்டாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மழை வெள்ளமோ - நதி வெள்ளமோ - பேய் வெள்ளமோ எவையாயினும் தீர்க்க முடியாத பிரச்னை இல்லை. இந்தியாவில் நீரியல் நிபுணர்களுக்கும் பொறியாளர்களுக்கும் பஞ்சமா என்ன?

1954-ல் இந்திய நதிகளில் வெள்ளம் ஏற்பட்டபோது நேரு அமைச்சரவையில் பல கமிட்டிகளை நிறுவிப் பல பிரச்னைகளை விவாதித்துப் பல நடவடிக்கைகள் ஆமைவேகத்தில் எடுக்கப்பட்டன.

1957-ல் வெள்ள நிர்வாகத்துக்கு ஒரு மேல்நிலைக் கமிட்டி நிறுவப்பட்டது. 1964-ல் வெள்ளத்தடுப்பு அமைச்சரவைக் கமிட்டி நிறுவப்பட்டது. 1972-ல் வெள்ளத்தடுப்புடன் நிவாரணக் கமிட்டி நிறுவப்பட்டது. ஐந்தாண்டுத் திட்டங்களுக்கான வெள்ள நிவாரண நடவடிக்கைக்குழு 1978-ல் நிறுவப்பட்டது. "ராஷ்ட்ரீய பாஹ் ஆயோக்' 1980-ல் உருவானது. தேசிய நீர்க்கொள்கை 1987-ல் அறிவிக்கப்பட்டது. ஒருங்கிணைந்த நீராதார வளர்ச்சித்திட்ட தேசியக்கமிஷன் 1996-ல் அறிவிக்கப்பட்டது.

இவ்வளவு திட்டங்கள் - நீர் நிர்வாக அமைப்புகள் இருந்தும் இன்னமும் இந்தியா கடலில் கலக்கும் முன்பே மழைவெள்ளம் மாசாவதையும், வீணாவதையும் தடுக்க முடியவில்லை. அதிக மழையால் நீர்த்தேக்கங்கள் தூர்படிந்து அதிக அளவில் மாசும் சேர்ந்து அதிக அளவு நீர் கடலில் கலந்து அதிக அளவில் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்படுவதுதான் கண்ட பலன்.

இந்த நாட்டின் தேசிய நீர்க்கொள்கை காகிதத்திட்டமாக ஆண்டுக்கு ஆண்டு புதுப்பிக்கப்பட்டாலும் நீரில் எழுதப்பட்ட எழுத்துகளாக உள்ளன. விவசாயிகளுக்கும் பாமரக் குடிமக்களுக்கும் எஞ்சியுள்ள தண்ணீர் அவர்கள் விடும் கண்ணீர்தான்.

ஆட்சியாளர்கள் கருத்தில்கொள்ள வேண்டிய விஷயங்களில் நகரக்குடிநீர் வழங்கலில் உள்ள முறைகேடுகள் களையப்பட வேண்டும். சுகாதாரமான குடிநீர், சமச்சீர் விநியோகம், கழிவுநீர் கலக்காத தடுப்பு நடவடிக்கை கவனத்தில் கொள்ளவேண்டும்.

வெள்ளம் இல்லாத காலங்களில் ஜீவநதிகளிலும் சரி, ஜீவனில்லாத காட்டாறுகளிலும் சரி, தொழில்துறைக் கசிவுகள் - தோல், சாயப்பட்டறை - சுரங்கம் - ரசாயன உற்பத்தித் தொழில் வழங்குபவை கலந்து மண்படுகை விஷத்தால் உறைந்த நிலையில் வெள்ளம் வந்தகாலத்தில் கீழே இறங்கும் நீர் மாசாகி, அம் மாசுநீர் ஊற்று நீராக உள்ளே சேமிக்கப்பட்டு, அதுவே குடிநீராக மாறுகிறது. அதுவே விவசாயத்துக்கும் பயனாகிறது. நதிகளில் மாசு கலப்பதைத் தடுக்கும் முயற்சிக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

மேல்நிலைக் கிணறுகளிலும், ஏரி, குளங்களிலும் நீர் நிரம்பினால்தான் அடிநிலை ஊற்றுக்கும் "ரிசார்ஜ்' கிட்டும். இன்று விவசாயம், குடிநீர் எல்லாமே நிலத்தடி நீர்மட்டத்திலிருந்து ஆழ்துளைக்

குழாய் மூலமே வழங்கப்படுவதால் பூமியில் விழும் மழைநீர் பூமிக்குள் இறங்கும் அளவில் அடர்ந்த புல்வெளி, மரங்கள் ஒவ்வோர் ஊரிலும் உருவாக வேண்டும்.

இந்தியாவின் நீர்த்தேவைக் கணக்கு நம்மைத் தலைசுற்றவைக்கும். வரவு இல்லாமல் செலவாகும் பொருளாகி வருவது தண்ணீர். மழைநீர்தான் வரவு. இதைப் பற்றிக்கொண்டு பற்றில் வைக்காமல் ஆழ்துளைக் கிணறு தோண்டி நீரைச் செலவழிக்கிறோம்.

நீரின் தேவை குடிநீர் மற்றும் விவசாயம் மட்டுமே என்பது தப்புக்கணக்கு.

இந்தியாவின் முதல் முக்கிய ஆறு தொழில்களான இரும்பு எஃகு, சிமெண்ட், காகிதம், மின்உற்பத்தி, யூரியா, அலுமினியம் ஆகியவற்றின் ஆண்டுத்தேவை 41,538 மில்லியன் கியூபிக் மீட்டர். இந்த அளவு நீர் 11 கோடி மக்களின் குடிநீர்த் தேவைக்கு நிகரானது.

இவைதவிர, நூற்பு ஆலை, சாயத்தொழில், தோல், மருந்து உற்பத்தி போன்ற இதர தொழில்களின் நீர்த்தேவை எத்தனை மில்லியன் கியூபிக் மீட்டர்களோ! நதி வெள்ளத்தைக் கடலில் இறக்கவிட்டு விட்டு ஆழ்துளைக் கிணறுகளைக் கொண்டு எவ்வளவு காலம் ஓட்டுவார்கள்?

மேட்டூர் அணை நிரம்பாதபோது கர்நாடகத்தைக் குறை கூறுவோம். மேட்டூர் அணை நிரம்பிய பின்னர் காவிரியில் வெள்ளம். காவிரியின் எல்லாக் கிளை நதிகளும் நிரம்பி ஓடிக் கடலில் விழும்போது கர்நாடகத்தைக் குறை கூற முடியுமா? காட்டன்துரை மேட்டூர் அணையைக் கட்டாத காலத்தில் சோழநாடு சோறுடைத்து என்ற பெருமையை எப்படிப் பெற்றது?

மேட்டூர் அணை கட்டப்படாத காலத்தில் கல்லணை வழியே திருப்பிவிடப்பட்ட காவிரியின் கிளை நதிகளும் வெண்ணாற்றின் கிளை நதிகளும் ஆயிரக்கணக்கான ஏரி, குளங்களுக்குச் சென்றடையுமாறு ஏராளமான கால்வாய்கள் வெட்டப்பட்டு தண்ணீர் சேமிக்கப்பட்டது.

ஏரி, குளங்களைக் குப்பைக் கிடங்காகவும், புதிய நகர்களாகவும், சமத்துவபுரங்களாகவும் மாற்றியது யார் குற்றம்?

மேட்டுப் பகுதியான கோவை, ஈரோடு, கரூர், நாமக்கல், திண்டுக்கல், மதுரை, விருதுநகர் மக்கள் என்ன செய்வார்கள்? இங்கு பெய்யும் மழையும் சுற்றிவளைத்துக் காவிரி கழிமுகப் பகுதிக்குத்தான் வெள்ளமாகப் பெருக்கெடுத்து ஓடுகிறது.

தமிழ்நாட்டின் மேட்டுப்பகுதி தக்காணப் பீடபூமியின் தென்பகுதி. இதே தக்காணப் பீடபூமியின் தொடக்கமான மராட்டிய மாநிலத்தில் அகமத் நகர் மாவட்டக் கிராமங்களில் சராசரி மழைப்பொழிவு தென்பகுதியைவிடக் குறைவு என்றாலும் வனத்துறை - பொதுப்பணித்துறை - பஞ்சாயத்து ஒருங்கிணைந்து செயல்பட்டு மழைநீரை மண்ணுக்குள் இறக்கி வளம் பெறுகின்றனர்.

அண்ணா ஹசாரே உருவாக்கிய ராலிகான்சித்தி கிராமத்தை உலகமே வியந்து நோக்குகிறது. இது பழைய கதை.

ராலிகான்சித்தியை உதாரணமாக வைத்து உள்ளூர் மக்கள் ஹிவரே பாசார் என்ற வறண்ட கிராமத்தை வளமாக்கியுள்ளனர். மழைநீர் சேமிப்பில் மராட்டிய மாநிலத்தில் மாபெரும் புரட்சி நிகழ்ந்து வருகிறது. குறைந்தபட்சம் தமிழக அரசு ஒரு குழு அமைத்து ராலிகான்சித்தி, ஹிவரே

பாசார் சென்று அவற்றைப்போல் ஒன்றை முயற்சிக்க வேண்டும். நீர் சேமிப்பு செய்ய வேண்டிய பூமியில் மனைக்கட்டுகளும், மானாவாரி பூமிகளை ஆக்கிரமித்து ஏழைகளுக்கு இலவச மனைப்பட்டா என்றெல்லாம் கூறி ஏமாற்ற வேண்டாம்.

இப்படி வழங்குவதைவிட கிராம ஏழைகளுக்குப் பல அடுக்கு மாடி மாளிகைகள் கட்டி ஃப்ளாட் வழங்கினால் பூமி மிச்சமாகுமே. தமிழ்நாடு உருப்பட வேண்டுமானால் நீர்க்கொள்கையைத் தண்ணீரில் எழுதிக் கடலுக்கு அனுப்பாமல் ராலிகான்சித்தி, ஹிவரே பாசார்போல் நீர்க்கொள்கையை மண்ணில் எழுதி பூமிக்குள் மழைநீரைச் சேமிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

தினமலர்

**காய்கறி, மளிகை பொருட்கள் மலிவாய் வாங்க வல்லம்படுகையில் புதிய வார சந்தை துவக்கம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 14,2011,02:28 IST

சிதம்பரம் : காய்கறிகள் மற்றும் மளிகை பொருட்கள் மலிவாய் வாங்கி பயனடையும் வகையில் கிராம மக்களின் நலன் கருதி வல்லம்படுகையில் புதிய வார சந்தை துவங்கப்பட்டது. கடந்த சில காலங்களாக ஏற்பட்டு வரும் விலைவாசி உயர்வால் பொதுமக்கள் நொந்து போயுள்ளனர். இதனால் சந்தையை தேடி சென்று பொருட்கள் வாங்கும் நிலைக்கு மக்கள் மாறி வருகின்றனர். குறிப்பாக காய்கறி விலையேற்றம் மக்களை வெகுவாக பாதித்துள்ளது. இதனால் கடலூர் மாவட்டத்தில் சமீப காலமாக சந்தை துவங்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு காட்டுமன்னார்கோவில் அடுத்த லால்பேட்டை, குமராட்சி என சந்தைகள் துவங்கி வெற்றிகரமாக நடந்து வருகிறது. இதனால் நூற்றுக்கும் மேற்பட்ட கிராம மக்கள் பயனடைந்து வருகின்றனர். பரங்கிப்பேட்டையில் நடக்கும் வியாழக்கிழமை சந்தையில் பொருட்கள் வாங்க வல்லம்படுகை, கொள்ளிடம் மற்றும் சுற்றியுள்ள 300க்கும் மேற்பட்டவர்கள் ரயில் ஏறி பொருட்கள் வாங்கி வருகின்றனர். இப்பகுதி மக்களின் சிரமத்தை போக்கும் வகையில் வல்லம்படுகை ஊராட்சி மன்ற தலைவர் கலையரசன் வியாபாரிகளிடம் பேச்சு வார்த்தை நடத்தி சந்தை துவக்க ஏற்பாடு செய்து நேற்று துவக்கி வைத்தார். இதனால் வல்லம்படுகை மற்றும் சுற்றியுள்ள 30க்கும் மேற்பட்ட கிராம மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். அனைத்து கிராமத்திற்கும் ஆட்டோ மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டதால் முதல் நாளிலேயே மக்கள் கூட்டம் அதிகரித்தது. இது குறித்து ஊராட்சி மன்ற தலைவர் கலையரசன் கூறுகையில், "வல்லம்படுகை மற்றும் சுற்றியுள்ள மக்கள் ரயிலில் ஏறி பரங்கிப்பேட்டை சந்தைக்கு செல்கின்றனர். இங்கு சந்தையை துவங்க முடிவு செய்து பொங்கல்

விழாவை முன்னிட்டு வியாழக்கிழமை துவங்கியுள்ளோம். ஆனால் ஒவ்வொரு வாரமும் செவ்வாய்கிழமை சந்தை நடைபெறும். இதனால் கொள்ளிடம், வல்லம்படுகை, வ.மாங்குடி, கருப்பூர், அத்திப்பட்டு உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட கிராம மக்கள் பயனடைவார்கள்' என்றார்.

**பயிர் காப்பீட்டுத் தொகை கிடைக்கவில்லை:அதிகாரிகள் அலட்சியத்தால் விவசாயிகள் அவதி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 14,2011,23:34 IST

கடலூர்: தேசிய மயமாக்கப்பட்ட வங்கி அதிகாரிகளின் அலட்சியத்தால், ஓராண்டாகியும் பயிர் காப்பீட்டுத் தொகை கிடைக்காமல் கடலூர் மாவட்ட விவசாயிகள் அவதிப்படுகின்றனர். இயற்கை சீற்றம் மற்றும் நோய் தாக்குதலாலும் விவசாயிகள் நஷ்டமடைவதை ஈடு செய்யும் பொருட்டு மத்திய அரசு தேசிய வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இதில் ஒவ்வொரு பருவத்திற்கும் விவசாயிகள் தாங்கள் பயிரிடும் பயிர்களுக்கு அரசு நிர்ணயிக்கும் காப்பீட்டுத் தொகையை வங்கிகளில் செலுத்த வேண்டும். அந்த பருவத்தில் இயற்கை சீற்றம் அல்லது நோய் பாதிப்பினால் மகசூல் குறைந்தால், அதற்கான இழப்பீட்டுத் தொகையை காப்பீட்டு நிறுவனம் வழங்கி வருகிறது. அதன்படி கடலூர் மாவட்டத்தில் கடந்த 2009ம் ஆண்டு சம்பா பருவத்தில் நெல் பயிரிட்ட 12 ஆயிரத்து 426 விவசாயிகள் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பிரிமியம் தொகையை கூட்டுறவு மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் செலுத்தினர். கடந்த 2009ம் ஆண்டு நவம்பர் மாதம் பெய்த கடும் மழை, அதன் காரணமாக ஏற்பட்ட புகையான் தாக்கியதால் மகசூல் குறைந்து விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்குள்ளாகினர். பயிர் காப்பீட்டு நிறுவன அதிகாரிகள் பயிர் பாதிப்புகளை நேரடியாக கள ஆய்வு செய்து இழப்பீட்டு தொகையை நிர்ணயம் செய்தனர். இருப்பினும் விவசாயிகளுக்கு இழப்பீட்டு தொகை வழங்காமல் காலம் கடத்தப்பட்டது. அமைச்சர் பன்னீர்செல்வம் தலையிட்டதை தொடர்ந்து ஓராண்டிற்கு பிறகு இழப்பீட்டு தொகையாக 4 கோடியே 7 லட்சம் ரூபாயை வேளாண் பயிர் காப்பீட்டு நிறுவனம் வங்கிகளுக்கு கடந்த நவம்பர் 29ம் தேதி வழங்கியது. அதனைத் தொடர்ந்து கூட்டுறவு வங்கிகளில் பயிர் காப்பீட்டு பிரிமியத் தொகை செலுத்திய 11 ஆயிரத்து 646 விவசாயிகளுக்கு 3 கோடியே 61 லட்சம் ரூபாய் இழப்பீட்டு தொகை வழங்கப்பட்டது. தேசிய வங்கிகளில் பிரிமியம் செலுத்திய 780 விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய இழப்பீட்டுத் தொகை 46 லட்சம் ரூபாயை இதுவரை வழங்கவில்லை. பயிர் காப்பீட்டு நிறுவனம் இழப்பீட்டு தொகையை செலுத்தி 45 நாட்களுக்கு மேலாகியும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கி அதிகாரிகளின் அலட்சியத்தால் இழப்பீட்டு தொகை கிடைக்காமல் விவசாயிகள் அவதிப்படுகின்றனர்.

**விதை முளைப்பு திறன் பரிசோதனை உற்பத்தியாளர்கள் பயன் பெற அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 14,2011,02:16 IST

விழுப்புரம் : விதை உற்பத்தியாளர்கள் தாங்கள் சேமித்து வைத்துள்ள விதைகளின் முளைப்பு திறனை பரிசோதனை செய்து பயன் பெறலாம். இது குறித்து விழுப்புரம் விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் ரேவதி விடுத்துள்ள செய்திக் குறிப்பு: வரும் பருவத்தில் சாகுபடிக்கு தேவையான விதைகளை உற்பத்தி செய்து ஒரு ஆண்டு வரை சேமிக்க வேண்டியதாகிறது. அவ்வாறு சேமிக்கும் விதையில் ஈரப்பதம் அதிகமாக இருக்கும் போது பூச்சிகள், பாக்டீரியா மற்றும் பூஞ்சானம் வளர்வதற்கு சாதகமான சூழ்நிலையால் முளைப்பு திறன் பாதிக்கிறது. சேமித்து வைக்கும் விதைகளின் ஈரப்பதத்தை குறைத்தால் மட்டுமே விதைகளின் முளைப்பு திறன் பாதிக்காமல் இருக்கும். நெல் விதைகளை 13 சதவீதம், மக்காச்சோளம், ராகி, கம்பு போன்ற சிறு தானிய விதைகளை 12 சதவீதம், பயறு வகை மற்றும் எண்ணெய் வித்துக்களை 9 சதவீதம் ஈரப்பதத்துடன் சேமித்தால் முளைப்பு திறன் குறையாமல் இருக்கும். விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள விதை உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்து சேமித்துள்ள மற்றும் பயன்படுத்தும் விதைகளின் ஈரப்பதம், புறத்தூய்மை, பிற ரக கலப்பு சதவீதம் மற்றும் முளைப்பு திறனை விழுப்புரம் வேளாண்மை இணை இயக்குனர் அலுவலக வளாகத்தில் இருக்கும் விதை பரிசோதனை நிலையத்தை அணுகி பயன்பெறலாம்.

**செங்கரும்பு விலை கிடுகிடு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 14,2011,01:38 IST

ஆத்தூர்: தமிழகத்தில் பொங்கல் செங்கரும்புகள் விளைச்சல் குறைந்ததால் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது.
சேலம், நாமக்கல், தேனி, திண்டுக்கல் போன்ற மாவட்ட பகுதிகளில் பொங்கல் பண்டிகையில் பயன்படுத்தும் செங்கரும்புகள் விளைவிக்கப்படுகிறது. இந்தாண்டு விளைச்சல் குறைந்ததால் வரத்து கணிசமானளவில் உள்ளன.
ஆத்தூர், தலைவாசல், வீரகனூர், கெங்கவல்லி போன்ற பகுதிகளுக்கு பொங்கல் செங்கரும்புகள் விற்பனைக்கு வந்துள்ளது. கடந்தாண்டு ஒரு ஜோடி (இரண்டு) கரும்பு 20 முதல் 30 ரூபாய் வரை விற்பனையானது.

இந்தாண்டு பொங்கல் பண்டிகை துவக்கத்திலேயே ஜோடி கரும்புகள் 50 முதல் 60 ரூபாய் வரை விற்கப்படுகிறது. அதேபோல் தங்கத்தை விஞ்சும் வகையில் மஞ்சள் வரலாறு காணத விலை உயர்ந்தது. கடந்த வாரத்தில் குவிண்டால் மஞ்சள் 16 ஆயிரத்து 980 ரூபாய் விற்பனையானது. அதனால் பொங்கல் பண்டிகையின்போது பிரத்யேகமாக பயன்படுத்தும் மஞ்சள் கொத்துகளும் ஜோடி 50 ரூபாய் வரை விற்கப்படுகிறது. உணவு பொருட்கள் மட்டுமின்றி பொங்கல் பண்டிகையில் பயன்படுத்தும் பொருட்களின் விலை உயர்வு பொதுமக்களை கடும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

**வாழைத்தார் விலை உயர்வு பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 14,2011,01:14 IST

ப.வேலூர்: பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வரத்து குறைந்ததால், வாழைத்தார் விலை உயர்ந்தது. அதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ப.வேலூர் தாலுகாவுக்கு உட்பட்ட பாலப்பட்டி, நன்செய் இடையாறு, பொய்யேரி, வேலூர், பொத்தனூர், பாண்டமங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் 3,000 மேற்பட்ட ஏக்கர் பரப்பில் வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இங்கு விளையும் வாழைத்தார்களை அறுவடை செய்யும் விவசாயிகள், ப.வேலூரில் நடக்கும் தினசரி ஏல மார்க்கெட்டுக்கு கொண்டு வருகின்றனர். அங்கு கரூர், நாமக்கல், ஈரோடு, கொடுமுடி பகுதியை சேர்ந்த வியாபாரிகள் வந்து வாழைத்தார்களை ஏலத்தில் எடுத்து லாரிகள் மூலம் எடுத்துச் சென்று விற்பனை செய்கின்றனர். பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வாழைதார் விலை உயரும் என எதிர்பார்க்கப்பட்டது.

வழக்கத்துக்கு மாறாக வாழைத்தார் வரத்து குறைந்தது. அதன் காரணமாக நேற்று தினசரி ஏல மார்க்கெட்டுக்கு தூத்துக்குடியில் இருந்து வாழைத்தார் கொண்டு வரப்பட்டிருந்தது. கடந்த வாரம் ஒரு வாழைத்தார் 120 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட கற்பூரவல்லி நேற்று 250 ரூபாய்க்கு விற்பனையானது. அதேபோல், 150 ரூபாய்க்கு விற்பனையான ரஸ்தாளி 200 ரூபாய்க்கும், 150 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட மொந்தன் 200 ரூபாய்க்கும், 100 ரூபாய்க்கு விற்பனையான பச்சலாடம் 150 ரூபாய்க்கும், 100 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட பூவன் 250 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. நேற்றைய ஏல மார்க்கெட்டில் 5,000 வாழைத்தார்கள் குவிக்கப்பட்டது. அத்தனையும் சிறிது நேரத்திலேயே விற்பனையானது. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வாழைத்தார் விலை உயர்வு அடைந்தை அடுத்த விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

நெல் அறுவடைக்கு பின் தொழில் நுட்பம் : வேளாண் துணை இயக்குனர் அறிவுரை

பதிவு செய்த நாள் : ஜனவரி 14,2011,01:20 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் தற்போது நெல் அறுவடை பணிகள் நடந்து வருகிறது. நெல் அறுவடைக்கு பின் செய்ய வேண்டிய தொழில் நுட்பம் குறித்து வேளாண் துறை அறிவுரை வழங்கியுள்ளது.
வேளாண் துணை இயக்குனர் நாகராஜன் வெளியிட்ட அறிக்கை: தர்மபுரி மாவட்டத்தில் பாலக்கோடு, பாப்பிரெட்டிப்பட்டி, அரூர், மொரப்பூர், பென்னாகரம், காரிமங்கலம், நல்லம்பள்ளி, தர்மபுரி உள்ளிட்ட வட்டாரங்களில் 72,317 ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டு தற்போது, அறுவடை பணிகள் நடந்து வருகிறது. நெல்லில் நல்ல வருவாய் பெற விவசாயிகள் நெல் அறுவடைக்கு பின் கடைப்பிடிக்க வேண்டிய தொழில் நுட்பங்களை பின்பற்றி அதிக வருவாய் பெறலாம். நெல் மணிகள் கூடுதல்க விலை பெறுவது அதில் உள்ள முணுமு அரிசியின் அடிப்படையில் தான் உள்ளது. நெல் மணிகளின் அரணையின் 62 சதம் முமு அரிசி கிடைத்திட பின் வரும் நேர்த்திகளை அறுவடைக்கு பின் செய்திட வேண்டும்.

நெல் ரகங்களில் வயதிற்கேற்றவாறு பயிரின் அறுவடையை உரிய காலத்தில் மேற்கொள்ள வேண்டும். நெல் கதிரின் மணிகள் 80 சதவீதம் மஞ்சள் நிறமாக மாறி இருந்தால் அறுவடைய மேற்கொள்ளலாம். இதனால், மணிகள் உததிர்வதை தவிர்க்க முடியும். அறுவடையின் போது 19 முதல் 23 சதவீதம் ஈரப்பதம் இருக்க வேண்டும். முதிர்ந்த நெல் மணிகளின் அரிசி கடுமையாகவும், உறுதியாகவும் இருக்கும். அறுவடை செய்த நெல்லை நன்றாக சுத்தம் செய்ய வேண்டும். அதிகசூரிய வெப்பத்தில் நெல்லை காய வைக்க கூடாது. காய வைத்த நெல்லின் ஈரப்பதம் 12 சதவீதம் இருக்க வேண்டும். அதிக ஈரப்பதமுள்ள நெல் மணிகளை சேமித்து வைத்தால் பூஞ்சாண வித்துக்கள் பரவி நெல்லின் தரம் பாதிக்கப்படும். நெல்லை சுத்தமான கோணிப்பைகளில் நிரப்பி தரையில் மீது மரச் சட்டங்கள் அல்லது காய்ந்த வைக்கோல் பரப்பி அதன் மேல் மூட்டைகளை அடுக்கி வைக்க வேண்டும்.

நெல் மூட்டைகளை சுவரில் இருந்து ஒரு அடி இடைவெளி விட்டு அடுக்கி வைத்தால், சுவற்றில் உள்ள ஈரப்பதம் நெல் மணிகளை தாக்காது. சேமித்து வைத்துள்ள நெல்லில் அத்துப்பூச்சி தாக்காமல் இருக்க மாலத்தியான் மருந்தை ஒரு லிட்டர் நீருக்கு 10 மில்லி மருந்து என்ற அளவில் கலந்து தரைப்பகுதி மற்றும் மூட்டைகளில் மீது தெளிக்க வேண்டும். விற்பனைக்கு 0்நலலை கொண்டு வரும் போது, ரகங்கள் வாரியாக கொண்டு வர வேண்டும். பூச்சிகள், பூஞ்சாணங்கள் தாக்கப்பட்ட நெல் மற்றும் ஈரப்பதத்தால் கெட்டுபோன நெல்லை தனியாக பிரித்து விட

வேண்டும். இந்த நடைமுறைகளை பின்பற்றி விவசாயிகள் நெல்லை விற்பனைக்கு கொண்டு வரும் போது, சந்தையில் கூடுதல் விலை கிடைக்கும்.

**நெல் பயிரை தாக்கும் குலைநோய் தடுப்பு முறை: அதிகாரி தகவல்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 14,2011,01:13 IST

பள்ளிபாளையம்: "நெல் பயிரில் குலைநோய் தாக்க வாய்ப்புள்ளது' என, பள்ளிபாளையம் வேளாண் உதவி இயக்குனர் முரளிதரன் தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: நெல் பயிரை தாக்கும் முக்கியமான நோய் குலைநோயாகும். இந்நோய் நெல் பயிரின் இலைகள், கணுக்கள் மற்றும் கதிரின் கழுத்துப் பகுதியை தாக்கும் நெல் பயிரின் இலைகளின் மேல் கண்வடிவ புள்ளிகள் தோன்றும் புள்ளியின் மையப் பகுதி சாம்பல் நிறமாகவும், ஓரம் பழுப்பு நிறமாகவும் இருக்கும். தண்டின் கணு கருமை நிறமாக மாறி சுருங்கிவிடும். கதிரின் கழுத்துப் பகுதி தாக்கப்படும்போது கணுப்பகுதி உடைந்து கதிர் முறிந்து வருகிறது. அதனால் நெல் மணிகள் பால் பிடித்து கதிர் சாவியாகிவிடும்.
காற்றில் ஈரப்பதம் அதிகமாகவும், குறைந்தபட்சம் இரவு வெப்பநிலை குறைவாகவும் பனி விழும் சூழ்நிலையிலும் குலைநோய் அதிக அளவில் நெல் பயிரைத் தாக்கும். காற்றின் மூலமாக இந்நோயின் பூஞ்சான வித்துக்கள் பரவுகின்றன.
அதிகளவு பரிந்துரைக்கு மேல் யூரியா, டி.ஏ.பி., அம்மோனியம் சல்பேட் போன்ற தலைச்சத்து உரங்களை வயல்களுக்கு இட்டால் நோயின் தாக்குதல்அதிகரிக்கும். வரப்புகளிலும், வயல்களிலும், களைகள், புல் பூண்டுகள் அதிகம் இருந்தாலும், இந்நோய் அதிகரிக்க வாய்ப்புண்டு.

சூடோமோனாஸ் ப்ளோரசன்ஸ் என்ற உயிர் மருந்தை ஒரு ஏக்கருக்கு 400 கிராம் வீதம் 200 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். மேலுரத்தை பிரித்து மூன்று முறையாக இடவேண்டும். தழைச்சத்து உரங்களை அதிகளவில் இடுவதை தவிர்க்க வேண்டும். வயல் வரப்பை சுத்தமாக பேண வேண்டும். இரவு வெப்பநிலை குறையும் போது வயலை தீவிரமாக கண்காணித்து வரவேண்டும். குலைநோØயைக் கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு கார்பன்டசீம் 200 கிராம் அல்லது டிரைசைக்ளோசோல் 75 டபுள்யூபி., 200 கிராம் மருந்தை பயிர் முழுவதும்படும்படி தெளிக்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிக்கப்பட்டுள்ளது.

**விதை கிராம திட்டத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 14,2011,01:22 IST

தர்மபுரி: தர்மபுரி தாலுகா கடத்தூரில் விதை கிராம திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடந்தது. மாவட்ட வேளாண் துணை இயக்குனர் மனோகரன், வேளாண் உதவி இயக்குனர் (விதை சான்று) வெங்கடேசன், வட்டார வேளாண் உதவி இயக்குனர் முருகேசன் ஆகியோர் தரமான விதை உற்பத்திக்கான உயர் தொழில் நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினர். "விவசாயிகள் தரமான விதைகளை பயன்படுத்துவதால் மட்டுமே 15 முதல் 20 சதவீதம் வரையில் உற்பத்தியை அதிகரிக்க முடியும். தரமான விதைகளØ பெற விதை உற்பத்தி தொழில் நுட்பங்களை விவசாயிகள் அவசியம் கடைப்பிடிக்க வேண்டும்' என வலியுறுத்தப்பட்டன.

"தரமான விதைகள் தனது பாரம்பரிய குணங்களில் இருந்து சிறிதும் குறையாமல் விதை விØத்தவுடன் நன்கு முறைத்து செழிப்பாகவும், சீராகவும் வளர்ந்து அதிக மகசூலுக்கு அடிப்படையாக அமையும் எனவுமம, களை, பிற ரக பயிர்களின் விதை கல்பில்லாமலும், பூச்சி நோய் தாக்குதல் இல்லாமல் இருக்க வேண்டும். பயிறு வகை உயர் மகசூல் பெற தரமான விதை உற்பத்தி முறைகளை தெரிந்து கொண்டு சிறந்த தொழில் நுட்பங்கள் மூலம் உற்பத்தி செய்து பயன்படுத்துவதன் மூலம் உயர் விளைச்சல் பெற முடியும்' என வேளாண் உதவி இயக்குனர் முருகேசன் விளக்கினார்.

**குறைந்த வாடகையில் அறுவடை இயந்திரம் : வேளாண் உயர்மட்ட குழு உறுப்பினர் தமிழக முதல்வருக்கு கோரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 14,2011,01:30 IST

பட்டுக்கோட்டை: பட்டுக்கோட்டை வேளாண்மை உயர்மட்ட குழு உறுப்பினர் வீரசேனன் தமிழக முதல்வருக்கு அனுப்பிய கடிதத்தில், "குறைந்த வாடகையில் தமிழக அரசு சார்பில் கூடுதல் அறுவடை இயந்திரங்களை வாங்கி வழங்க வேண்டும்' என கோரிக்கை விடுத்துள்ளார். முதல்வருக்கு அவர் அனுப்பிய கடிதத்தில் கூறியதாவது: காவிரி டெல்டா மாவட்டங்களான தஞ்சை, நாகை, திருவாரூர் ஆகிய பகுதிகளில் உள்ள விவசாயிகள் மேட்டூரில் நீர் இருப்பு, பருவமழை ஆகியவற்றினை எதிர்பார்த்து ஒரு போகம் மட்டுமே சி.ஆர்.,1009 (சாவித்திரி), சி.ஓ.,43, ஆடுதுறை 45 ஆகிய நெல் ரகங்களை சாகுபடி செய்து வருகின்றனர். நடவு செய்தல்,

களை எடுத்தல், கதிர் அறுவடை செய்தல் போன்ற பணிகளை செய்வதற்கு தேவையான விவசாய தொழிலாளர்கள் இந்த மாவட்டங்களில் பற்றாக்குறை ஏற்பட்டு உள்ளது.

கிராம புறங்களில் விவசாயப் பணிகள் இல்லாத நாட்களில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்திடும் வகையில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டம் (100 நாள் வேலை ) செயல்படுத்தப்படுவதால் விவசாயப்பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்கள் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிட்டது. விவாசாயிகள் பொங்கல் நேரத்தில் மட்டுமே முழுவீச்சில் அறுவடையில் ஈடுபடுவர். ஆள்பற்றாக்குறையினாலும், அளவுக்கு அதிகமான பருவமழையாலும் விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனை பயன்படுத்தி அரசின் மானியவிலையில் அறுவடை இயந்திரங்களை வாங்கி அறுவடை செய்து வரும தனியார் நிறுவனத்தினர் விவசாயிகளிடம் அதிகளவில் விவசாயிகளிடம் வாடகை வசூல் செய்கின்றனர்.

இந்த ஆண்டு சங்கிலி மூலம் இயங்கும் கதிர் அறுக்கும் இயந்திரத்தை மணிக்கு இரண்டாயிரமும், டயர் மூலம் இயங்கும் இயந்திரத்தை ஆயிரத்து 500 ரூபாய் வீதமும் வசூல் செய்கின்றனர். மூடை ஒன்றுக்கு 15 ரூபாய் வீதம், 33 செண்டுக்கு 300 ரூபாய் வீதம் வாடகையாக வசூலிக்கின்றனர். ஆனால், அரசு வேளாண்மை பொறியியல் துறையில் கதிர் அறுவடை இயந்திரத்துக்கு மணி ஒன்றுக்கு ஆயிரத்து 100 ரூபாய் மட்டுமே அரசு வாடகையாக வசூலிக்கின்றனர். அறுவடை இயந்திரங்களின் பயன்பாடு தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு அதிகளவில் தேவைப்படுவதால் அரசு கூடுதலாக இயந்திரங்களை வாங்கி வழங்க வேண்டும். இடைத்தரகர்களின் தலையிடு இல்லாமல் தனியார் நிறுவனங்களுக்கும் அரசே வாடகையை நிர்ணயம் செய்ய வேண்டும், என பட்டுக்கோட்டை வேளாண்மை உயர்மட்ட குழு உறுப்பினர் வீரசேனன் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

**தேங்காய் பருப்பு விலை திடீர் சரிவு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 14,2011,02:05 IST

கோபிசெட்டிபாளையம்: ஒரு மாதமாக ஜெட் வேகத்தில் விலை உயர்ந்து வந்த தேங்காய் பருப்பு, திடீரென ஐந்து ரூபாய் வரை அதிரடியாக விலை குறைந்தது. எண்ணெய் மார்க்கெட்டில் அதிகவிலை, மழை மற்றும் கடும் குளிர் காரணமாக தேங்காய் உற்பத்தி குறைவு, ஐயப்ப பக்தர்களால் தேங்காய்க்கு கடும் கிராக்கி உள்ளிட்ட காரணங்களால் தேங்காய் பருப்புக்கு விலை அதிகரித்தது. ஓராண்டில் அதிகபட்சமாக கடந்த வாரம் ஒரு கிலோ தேங்காய் பருப்பு 64.09

ரூபாய்க்கு விலை எகிறியது. விவசாயிகள் தேங்காய் பருப்பை அதிகளவில் உற்பத்தி செய்தனர். திடீரென, எண்ணெய் மார்க்கெட்டில் நிலவி வரும் ஸ்திரமற்ற நிலையில் தேங்காய் பருப்புக்கு விலை குறைந்தது. கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு நேற்று முன்தினம் 193 மூட்டை தேங்காய் பருப்பு வந்தது. அதிகபட்சமாக கிலோ 59.07 ரூபாய், குறைந்தபட்சமாக 56.89 ரூபாய், சராசரியாக 57.58 ரூபாய்க்கு விற்றது. சென்ற வாரத்தை விட 4.99 பைசா விலை குறைந்தது. மொத்தம் 12 லட்சம் ரூபாய் மதிப்பில் தேங்காய் பருப்பு வர்த்தகம் நடந்தது.

**கூடுதலாக 15 நாள் தண்ணீர் விவசாயிகள் வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 14,2011,01:59 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசனப் பகுதிக்கு கூடுதலாக 15 நாட்கள் வரை தண்ணீர் திறக்கும்படி பொதுப்பணி துறைக்கு விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர். பவானிசாகர் அணையில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீர் கொடிவேரி அணையில் தேக்கி வைக்கப்பட்டு, அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி வாய்க்கால்களில் திறக்கப்படுகிறது. இரண்டாம் போகத்துக்கு சில மாதங்களுக்கு முன் தண்ணீர் திறக்கப்பட்டது. வழக்கமாக ஃபிப்ரவரி 15ம் தேதி தண்ணீர் நிறுத்தப்படும். ஆனால் அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி வாய்க்கால்கள் நபார்டு வங்கி திட்டத்தின் கீழ் பல லட்சம் செலவில் பராமரிப்பு பணி நடப்பதால், ஒரு மாதம் முன்கூட்டியே ஜனவரி 15ம் தேதி தண்ணீர் நிறுத்தப்படும் என, பொதுப்பணித் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டது. விவசாயிகளும் இரண்டாம் போக பணிகளை விறுவிறுப்பாக துவங்கினர்.

வடகிழக்கு பருவ மழை மற்றும் புயல் சின்னம் காரணமாக கோபி வட்டாரப் பகுதியில், செப்டம்பர் 20ம் தேதி முதல் மழை பெய்யத் துவங்கியது. அதிகபட்சமாக 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு நவம்பர் மாதம் மட்டும் 550 மி.மீ., மழை பெய்தது. நூற்றுக்கணக்கான ஏக்கரில் மழை நீர் புகுந்தது. களை எடுத்தல், உரமிடுதல் உள்ளிட்ட விவசாயப் பணிகளை செய்ய முடியாமல் விவசாயிகள் தவித்தனர். டிசம்பர் மாதம் மழை சற்று ஓய்ந்தது. தற்போது கோபி அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசன பகுதிகளில் நெல் அறுவடை துவங்கியுள்ளது.

பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தபடி தண்ணீர் நிறுத்த இன்னும் இரண்டு நாட்களே உள்ளதால், நெல் அறுவடையை முழுவதும் முடிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. கூடுதலாக வரும் ஜனவரி 31ம் தேதி வரை அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி வாய்க்காலில் தண்ணீரை திறந்து விட வேண்டும்' என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

கரும்பு விலை ஜோடி ரூ.70; வெல்லம் விலை சரிவு

பதிவு செய்த நாள் : ஜனவரி 14,2011,01:55 IST

ஈரோடு: பொங்கல் பண்டிகை நெருங்குவதால் கரும்பு ஒரு ஜோடி 70 ரூபாயாக உயர்ந்துள்ளது. இலவச பொங்கல் பை அறிவிப்பால் வெல்லம் கிலோ 28 ரூபாயாக குறைந்துள்ளது. பொங்கல் பண்டிகை நாளை கொண்டாடப்படுகிறது. பொங்கல் என்றால் அனைவருக்கும் நினைவுக்கு வருவது கரும்பு. சென்ற இரு ஆண்டுகளாக மஞ்சள் விலை பல மடங்கு உயர்ந்து விட்டால், கரும்பு பயிரிடுவது குறைந்துள்ளது. நடப்பாண்டு கரும்பு விலை "கிடுகிடு'வென உயர்ந்துள்ளது. சென்றாண்டு ஒரு ஜோடி கரும்பு 30 ரூபாய் வரை விற்கப்பட்டது. நடப்பாண்டு 70 ரூபாயாக உயர்ந்துள்ளது. விலை உயர்வு செங்கரும்பு உற்பத்தியாளர்களிடம் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இலவச பொங்கல் பை அறிவிப்பால், நாட்டு சர்க்கரை விலை குறைந்துள்ளது. சில வாரங்களுக்கு முன் குண்டு வெல்லம் கிலோ 40 ரூபாய் வரை விற்கப்பட்டது. தமிழக அரசு சார்பில் இலவச பொங்கல் பை வழங்கப்பட்டது. அரை கிலோ வெல்லம், பச்சரிசி மற்றும் பொங்கலுக்கு தேவையான பொருட்கள், அதில் இருந்தன. தமிழக அரசு சார்பில் வெல்லம் வழங்கப்பட்டதால் வெல்லம் விலை திடீரென வீழ்ச்சி அடைந்துள்ளது. 40 ரூபாய்க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ வெல்லம் 28 ரூபாயாக குறைந்துள்ளது.

ஈரோடு மாவட்ட தொழில் வர்த்தகசபை செயலாளர் கிருஷ்ணசாமி கூறியதாவது: வெல்லம் உற்பத்தி அதிகரிப்பு, தேவை குறைவு காரணமாக வெல்லம் விலை 28 ரூபாயாக குறைந்துள்ளது. பொங்கலுக்கு தேவையான அரிசி, முந்திரி, ஏலக்காய் போன்றவற்றின் விலை சில வாரங்களாக ஒரே நிலை நீடிக்கிறது. பச்சரிசி ஒரு கிலோ 20 முதல் 24 ரூபாய், முந்திரி 400 ரூபாய், ஏலக்காய் 1,600 ரூபாய், பாசிப்பருப்பு 65 ரூபாய், துவரம் பருப்பு 50 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. தென்னாப்ரிக்காவில் இருந்து ஏலக்காய் வரத்து குறையும் போது, விலை அதிகரித்துவிடும். நடப்பாண்டு ஏலக்காய் வரத்து குறைவாக இருப்பதால் கிலோவுக்கு 200 ரூபாய் வரை அதிகரித்துள்ளது. வெல்லத்தை தவிர மற்ற பொருட்கள் விலையில் மாற்றம் இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.

**மூடப்பட்ட இறால் பண்ணைகளை மீண்டும் திறக்க முயற்சி**

பதிவு செய்த நாள் : ஜனவரி 14,2011,01:57 IST

தூத்துக்குடி:மூடப்பட்ட இறால் பண்ணைகளை எல்லாம் மீண்டும் திறப்பதற்கான முயற்சியில் இந்திய கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் தலைவர் நீதிபதி ராஜன் தெரிவித்தார்.இந்திய அரசின் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையம் சார்பில் இறால் வளர்ப்பில் புதிய வாய்ப்புகள் என்பது பற்றிய விழிப்புணர்வு முகாம் தூத்துக்குடி மீன்வளக்கல்லூரியில் நடந்தது. விழிப்புணர்வு முகாம் தொடக்க விழாவிற்கு கலெக்டர் மகேஸ்வரன் தலைமை வகித்தார். விழிப்புணர்வு முகாமினை கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் தலைவர் நீதிபதி ராஜன் தொடங்கி வைத்தார். மீன்வளக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் டீன் டாக்டர் நந்திஷா மற்றும் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் தொழில்நுட்ப இயக்குநர் டாக்டர் பாஸ்கர் மணிமாறன் ஆகியோர் பேசினர். தூத்துக்குடி மாவட்ட மீன்வளத்துறை உதவி இயக்குநர் பிரபாவதி நன்றி கூறினார். இந்த விழிப்புணர்வு முகாமில் இறால் வளர்ப்பு பண்ணையாளர்கள் மற்றும் மீன்வளத்துறை அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். விழிப்புணர்வு முகாமின் நோக்கம் குறித்து ஆணையத்தின் தலைவர் நீதிபதி ராஜன் நிருபர்களிடம் கூறும்போது; 1990ம் ஆண்டு தூத்துக்குடி மாவட்டத்தில் தான் அதிக அளவில் இறால் பண்ணைகள் அமைக்கப்பட்டது. ஆனால் தற்போது இந்த பண்ணைகள் எல்லாம் மூடப்பட்டுவிட்டது. கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் முக்கிய பணி இறால் வளர்ப்பினை ஒருங்கிணைத்து, விஞ்ஞான முறையில் சுற்றுப்புற சூழலுக்கு பாதிப்பு வராமல் இறால்களை வளர்ப்பது தான். விதை கட்டுபாடு, மருந்து கட்டுபாடு, உணவு கட்டுபாடு என்பது உள்ளிட்ட பல தகவல்களை ஆணையம் பண்ணையாளர்களுக்கு வழங்கும். குறிப்பாக சுற்றுப்புழ சூழல் பாதிக்கப்பட கூடாது என்பது தான் எங்கள் ஆணையத்தின் மிக முக்கியமான பணியாகும். பண்ணையில் இருந்து கழிவுகளை எல்லாம் எவ்வாறு வெளியேற்ற வேண்டும் என்பது குறித்து பண்ணையாளர்களுக்கு தெரிவிப்பதோடு, அதனை அவர்கள் சரியான முறையில் கடைபிடிக்கிறார்களா என்பதையும் கண்காணித்து வருகிறது. தற்போது இந்தியாவில் சுமார் 22 ஆயிரம் பதிவு செய்யப்பட்ட இறால் பண்ணைகள் செயல்பட்டு வருகிறது. இது தவிர பதிவு செய்யப்படாமல் பல பண்ணைகள் செயல்பட்டு வருகிறது. ஆணையத்திடம் பதிவு செய்யாமல் இறால் பண்ணைகள் நடத்துவது குற்றமாகும். தென்மாவட்ட கடலோர பகுதிகளில் விவசாய வளம் மிகவும் குறைவு. நல்ல மண் வளம் இல்லாததால் விவசாயம் செய்ய முடியாத சூழ்நிலை நிலவி வருகிறது. இந்த பகுதியைச் சேர்ந்தவர்கள் எல்லாம் நல்ல லாபம் கிடைக்ககூடிய இறால் வளர்ப்பில் ஈடுபடலாம். அவர்களை ஊக்குவிக்கும் முயற்சியில் தற்போது ஆணையம் ஈடுபட்டு வருகிறது. மூடப்பட்ட இறால் பண்ணைகளை எல்லாம் மீண்டும் திறப்பதற்கான முயற்சியில் ஆணையம் ஈடுபட்டு வருகிறது. ஆந்திர மாநிலத்தில் மூடப்பட்ட பல இறால்

பண்ணைகள் தற்போது மீண்டும் திறக்கப்பட்டு வருகிறது. இதற்கு முக்கிய காரணம் இறால் தொழிலில் தற்போது நல்ல லாபம் கிடைத்து வருவது தான். 2010ம் ஆண்டில் இறால் ஏற்றுமதி 25 சதவீதம் அதிகரித்துள்ளது. தூத்துக்குடி மற்றும் ராமநாதபுரம் பகுதியில் இறால் பண்ணை அமைப்பதற்கு ஏற்ற இடமாகும். இறால் தாய் மீன்கள் ஹவாய், தாய்லாந்து, சிங்கப்பூர் போன்ற இடங்களில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு அதில் இருந்து தரமான குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு பண்ணையாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. உள்நாடு மற்றும் வெளிநாட்டில் இந்த மீன்களுக்கு அதிக கிராக்கி உள்ளதால் கடலோர பகுதிகளை சேர்ந்தவர்கள் இந்த தொழிலில் ஈடுபட வேண்டும் என்பதற்காகத்தான் இது போன்ற விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டு வருகிறது என்றார்.

**கால்நடைகளுக்கு வாய் சப்பை நோய்: பால் உற்பத்தி குறைவு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 13,2011,22:38 IST

மேட்டுப்பாளையம் : மேட்டுப்பாளையம் சுற் றுப்பகுதிகளில் கால்நடைகளுக்கு "வாய் சப்பை' நோய் தாக்கியதால், வாய், கால் ஆகிய இடங்களில் புண் ஏற்பட்டு மெலிந்து காணப் படுகின்றன. பால் உற்பத்தியும் குறைந்துள்ளது.
மேட்டுப்பாளையம், காரமடை, சிறுமுகை, தொட்டபாவி, ஆலாங் கொம்பு, ராமம்பாளையம், தேரம்பாளையம், ஜடையம்பாளையம், நால்ரோடு, ஆலமர பஸ்ஸ்டாப் ஆகிய பகுதிகளில் உள்ள கால்நடைகளுக்கு "வாய் சப்பை' நோய் தாக்கியுள்ளன. வாயிலும், காலிலும் புண் வந் துள்ளதால், உடல் மெலிந்து காணப்படுகின்றன. இது குறித்து தொட்டபாவி விவசாயி ராஜன் கூறியதாவது: இப்பகுதியில் உள்ள விவ சாயிகள் வளர்க்கும் கறவை மாடுகளுக்கு வாய்சப்பை நோய் தாக்கியுள்ளது. வாயில் புண் இருப்பதால் தீவனம் சாப்பிடுவதில்லை. காலில் புண் இருப்பதால் நடக்கவும் நிற்கவும் முடியாமலும் படுத்துக் கிடக்கின்றன. உடல் மெலிந்து, பால் உற்பத்தியும் குறைந்துள்ளது. அரசு கால்நடை மருத்துவமனை டாக்டர்களிடம் கூறினால் கண்டு கொள்வதில்லை. காலில் புண் இருப்பதால், மருத்துவமனைக்கும் மாடுகளை அழைத்துச் செல்ல முடியாமல் உள்ளது. நோயின் தாக்கம் அதிகரித்து வருகிறது.
எனவே, மாவட்ட கால்நடை நிர்வாகம் கிராமங்களில் சிறப்பு முகாம் அமைத்து வாய் சப்பை நோயை குணமாக்கவும், கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு விவசாயி ராஜன் கூறினார். அரசு கால்நடை மருத்துவ மனை ஊழியர் ஒருவர் கூறுகையில்,"வாய் சப்பை நோய் ஒரு மாட்டிலிருந்து மற்றொரு மாட்டுக்கு பரவும் தன்மையுடையது. கர்நாடக மாநிலத்தில் இந்நோய் அதிகளவில் உள்ளது. அப்பகுதியில் இந்நோய் தாக்கிய மாடுகளை புளியம்பட்டி சந்தைக்கு விற்பனை கொண்டு வருகின்றனர். அங்கிருந்து வாங்கி வரும் மாடுகளில் நோய்

தாக்கியிருந்தால், மற்ற மாடுகளுக்கும் பரவ வாய்ப்பு உள்ளது. விவசாயிகள் பசு மாடுகளுக்கு தடுப்பூசி போட வேண்டும்' என்றார்.

**விவசாயிகளுக்கு ஆலோசனை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 13,2011,23:14 IST

சிவகங்கை : விதை ஆய்வு இயக்குனர் உமர்கத்தா கூறியது: மாவட்டத்தில் தற்போது தென்னங்கன்று நடவுப்பணி நடக்கிறது. அரசு அங்கீகாரம் பெற்ற நர்சரிகளில் மட்டுமே மரக்கன்றுகளை வாங்கவேண்டும். பயிர் விதை, தென்னங்கன்றுகளை விதை கட்டுப்பாடு சட்டத்தின்படி, லைசென்ஸ் பெற்றுத்தான் விற்க வேண்டும். தென்னங்கன்றுகளை விற்கும் போது கண்டிப்பாக ரசீது தர வேண்டும், என்றார்.



## *உணவு பொருள்களுக்கான பணவீக்கம் 16.91 சதவீதம்*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*நாட்டில் உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம், ஜனவரி 1–ந் தேதியுடன்*

நிறைவடைந்த வாரத்தில் 16.91 சதவீதம் அதிகரித்துள்ளது. முந்தைய வாரத்தில் இது 18.32 சதவீதம் உயர்ந்து இருந்தது. இதனுடன் ஒப்பிடும்போது தற்போது பணவீக்கம் 1.41 சதவீதம் குறைந்துள்ளது.

இருப்பினும், உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 15 சதவீதத்திற்கும் அதிகமாக இருப்பது கவலை அளிக்கும் அம்சமாகும்.

வெங்காயம்

வெங்காயம் மற்றும் காய்கறி விலை உயர்ந்து வருவதே உணவு பொருள் பணவீக்க விகிதம் அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாகும். கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில் வெங்காயம் விலை 1.73 சதவீதமும், காய்கறி விலை 3.84 சதவீதமும் உயர்ந்துள்ளது. இது, சென்ற ஓர் ஆண்டு காலத்தில் முறையே 70.70 சதவீதம் மற்றும் 70.73 சதவீதம் உயர்ந்துள்ளது.

ஓர் ஆண்டு காலத்தில், பால் விலை 13.20 சதவீதமும், பழங்கள் விலை 71.71 சதவீதமும் அதிகரித்துள்ளது. காய்கறி விலை உயர்ந்துள்ள நிலையில், முட்டை, இறைச்சி, மீன் ஆகிய அசைவ உணவு பொருள்கள் விலை ஓர் ஆண்டில் 16.70 சதவீதம் உயர்ந்துள்ளது.

அதேசமயம், ஓர் ஆண்டு கால அடிப்படையில் பருப்பு வகைகள் (14.8 சதவீதம்), கோதுமை (4.87 சதவீதம்), உருளைக்கிழங்கு (1.67 சதவீதம்) ஆகியவற்றின் விலை குறைந்துள்ளது.

எரிபொருள்

மொத்த விலைக் குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் பொது பணவீக்க விகிதத்தை கணக்கிடுவதில், உணவு பொருள்களின் பங்களிப்பு 10 சதவீதமாக உள்ளது. கணக்கீடு செய்ய எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில் எரிபொருள் பணவீக்கம் 11.53 சதவீதம் உயர்ந்துள்ளது. பொது பணவீக்க விகிதத்தில் இதன் பங்களிப்பு 15 சதவீதமாக உள்ளது.

இதனையடுத்து, டிசம்பர் மாதத்திற்கான பொது பணவீக்க விகிதம் 8 சதவீதத்தை தாண்டும் என சில பொருளாதார நிபுணர்கள் கணித்துள்ளனர். கடந்த நவம்பர் மாதத்தில் இது 7.48 சதவீதமாக இருந்தது. டிசம்பர் மாதத்திற்கான பொது பணவீக்கம் குறித்த அதிகாரபூர்வமான அறிவிப்பு இன்று வெளியிடப்படுகிறது.